ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

51 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I, II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I, II
Drama and Theatre (Tamil) I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I

**அறிவுறுத்தல்கள் :**

- ✼ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✼ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- ✼ **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- ✼ அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** இலங்கைத் தமிழ்ப் பாரம்பரியத்தில் கூத்துக்கள் ஆடப்பெறும் ஆற்றுகைவெளி எப்பெயரால் அழைக்கப்படும்?
(1) வட்டக்களரி (2) கூத்தம்பலம்
(3) படச்சட்டமேடை (4) புரொசீனியம் அரங்கு

**2.** படைக்கப்படும் போதே நுகரப்படத்தக்கதான கணப்பிரசன்னமான கலை வடிவங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதி
(1) நாடகம், சிற்பம், நடனம் (2) பலே, ஒபேறா, ஓவியம்
(3) கட்டடம், வில்லுப்பாட்டு, இலக்கியம் (4) பலே, ஒபேறா, கூத்து

**3.** குறித்த ஒரு பாத்திரத்தின் உணர்வு நிலையைக் காட்டுவதற்குப் பாவிக்கப்படும் ஒளி விளக்கு
(1) பரப்பொளி (2) வர்ணச் சக்கரம் (3) பொட்டொளி (4) மங்கலாக்கி

**4.** பின்வருவனவற்றுள் ஒளிப்பதிவுக் கருவியின் முன்னால் நிகழ்த்தப் பெற்று தொழில்நுட்பத்தின் உதவியுடன் வெளிப்படுத்தும் கலை வடிவம்
(1) வானொலி நாடகம் (2) தெருவெளி நாடகம்
(3) தொலைக்காட்சி நாடகம் (4) ஊம நாடகம்

**5.** முன்தயாரித்தலின்றி அரங்கச் செயற்பாடுகளைத் தனது கற்பனைக்கமைவாக வெளிப்படுத்தக்கூடிய ஆற்றல் என அழைக்கப்படுவது
(1) செயலியக்கத் திறன் (2) புதிதளித்தல் திறன்
(3) தொடர்பாடல் திறன் (4) அசைவியக்கத் திறன்

**6.** பார்ப்போர் பகுதியுள் நீண்டிருக்கும் ஆற்றுகைப் பகுதியைக் கொண்ட அரங்கவெளி
(1) கிரேக்க அரங்கு (2) ரோம அரங்கு (3) படச்சட்ட அரங்கு (4) குளோப் அரங்கு

**7.** சாரீர வளம், இசை ஞானம், நடிப்புத் திறன் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்ட பாடல் வழி அரங்க வெளிப்பாடு மரபு சார்ந்த கலை வடிவம்
(1) வசந்தன் கூத்து (2) இசை நாடகம் (3) நாட்டைக் கூத்து (4) வேடன்பறி ஆட்டம்

**8.** பேசாப்பாவனை நாடகத்தில் **இடம்பெறாத** சித்திரிப்பு முறை
(1) காண்பிய வழிச் சித்திரிப்பு (2) உடல் வழிச் சித்திரிப்பு
(3) உணர்ச்சி வழிச் சித்திரிப்பு (4) குரல் வழிச் சித்திரிப்பு

[பக். 2 ஐப் பார்க்க

**9.** பின்வருவனவற்றுள் தாளத்திற்கு அமைவான அசைவுகளுக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கது
(1) மரத்திலிருந்து இலை விழுதல் (2) கடல் அலை அசைதல்
(3) அணி நடைக் காட்சி (4) நீர் வீழ்ச்சியின் அசைவு

**10.** பின்வருவனவற்றுள் 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் இடம்பெற்ற நாடகப்பாடல்
(1) "கோடை கொடும்பனி மழை குளிரை..."
(2) "எங்கள் மண்ணின் ஒவ்வொரு புல்லையும்..."
(3) "என்னடி உன்தன் கோப்பியில்..."
(4) "தாய் மடி அல்லவோ தரணியின்..."

**11.** 'பாஸ்கா' எனப்படுவது
(1) இயேசுவின் பிறப்புப் பற்றிய கதையைக் குறிப்பது
(2) இயேசுவின் பாடுகள் சுமந்த கதையைக் குறிப்பது
(3) கன்னிமரியாள் மலைத் தொடரில் அல்லல்படுவதைக் குறிப்பது
(4) பிலாத்து மன்னனின் கதையைக் குறிப்பது

**12.** ஆற்றுகைக் கலையாகிய நாடகத்தின் மிகப் பிரதானமான வெளிப்பாட்டு மூலமாகக் கொள்ளத்தக்க கலைஞன்
(1) மேடை முகாமையாளர் (2) நடிகர்
(3) நெறியாளர் (4) தயாரிப்பாளர்

**13.** பின்வருவனவற்றுள் அரங்க விளையாட்டு எனக் கருத**முடியாதது**
(1) ஆடும் வீடும் (2) கரடியும் கிராம மக்களும்
(3) பழக்கலவை (4) கிளித்தட்டு

**14.** பாத்திரத்தின் வயது, தோற்றம், பால் நிலை போன்ற விடயங்களைக் குறிக்கும் பண்பு பின்வருவனவற்றுள் எது?
(1) சமூகவியற் பண்பு (2) உளவியற் பண்பு
(3) பௌதிகப் பண்பு (4) உள்ளார்ந்த பண்பு

**15.** 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் 'ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக' சித்திரிக்கப்படும் பாத்திரம்
(1) சறோஜினி (2) செல்வராணி
(3) சுபத்திரா (4) ஆரணி

**16.** 'புதியதொரு வீடு' நாடகத்தினைப் 'பா' வடிவில் எழுதியவர்
(1) இ. முருகையன் (2) அம்பி
(3) து. உருத்திரமூர்த்தி (4) சுந்தரலிங்கம்

● பின்வரும் உரையாடற்பகுதியை வாசித்து **17** தொடக்கம் **20** வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.
A - கையிலே என்ன கதறுது?
B - நான் ஒரு நாள் சொன்னேன் தருவான் விசயன் என்று, தந்தான்
C - அவனின் தகப்பனார் ஏசாரே?

**17.** மேற்படி உரையாடலில் இடம்பெற்ற பாத்திரங்கள் A, B, C என்பன முறையே
(1) மயிலி, மன்னவன், மாசிலன் (2) மாசிலன், மயிலி, மன்னவன்
(3) ரஜீவ், ராஜ்குமார், அம்பிகை (4) மறைக்காடர், மயிலி, மன்னவன்

**18.** மேற்படி உரையாடல் இடம்பெறும் நாடகம்
(1) உடையார் மிடுக்கு (2) தணியாத தாகம்
(3) புதியதொரு வீடு (4) விதானையார் வீட்டில்

**19.** மேற்படி உரையாடல் இடம்பெற்ற நாடகத்தின் பேசுபொருள்
(1) கட்டிளமைப் பருவத்தினரது பிரச்சினை
(2) கரையோரப் பிரதேச மக்களின் வாழ்வியல் துன்பம்
(3) சமகால அரசியற் பிரச்சினை
(4) முதியோர் பிரச்சினை

**20.** இந்நாடகத்தை முதன் முதலில் நெறியாள்கை செய்தவர்
(1) சி. மௌனகுரு (2) பிரான்சிஸ் ஜெனம்
(3) தாசீசியஸ் (4) ஜோன்சன் ராஜ்குமார்

[பக். 3 ஐப் பார்க்க

**21.** அசைவியக்க வடிவாக்கம் (choriography) தொடர்பில் பின்வருவனவற்றுள் **பொருத்தமற்ற** கூற்று
(1) மேடையின் பௌதிகத் தளம், அதன் சமநிலை என்பன பேணப்படுதல்
(2) லயத்தோடும், காலகதியோடும் பொருந்தி நிற்றல்
(3) கட்புலக் கவர்ச்சி மிக்கதும் ஒத்திசைத் தன்மையும் கொண்டிருத்தல்
(4) தொனி, ஏற்ற இறக்கம் கருத்திற் கொள்ளப்படுதல்

**22.** குரற் பயிற்சிக்கு அடித்தளமாய் அமையும் பயிற்சியாக அமைவது
(1) உடற்பயிற்சி (2) உளப்பயிற்சி
(3) சுவாசப்பயிற்சி (4) புலனுணர்தற் பயிற்சி

**23.** பூதத்தம்பி இசை நாடகத்தில் **இடம்பெறாத** பாத்திரம்
(1) அந்திராசி (2) வஞ்சிப் பத்தன் (3) அழகவல்லி (4) பூதத்தம்பி

**24.** "நான் அலரி மலர்க்கணை தொடுப்பனடி அடி ரதியே மானே" எனும் பாடல் இடம்பெற்ற கூத்து
(1) காத்தவராயன் கூத்து (2) காமன் கூத்து
(3) கோவலன் கூத்து (4) பொன்னர் சங்கர்

**25.** 'மூப்பன்' என அழைக்கப்படும் தலைவனைக் கொண்ட கூத்து வடிவம்
(1) வசந்தன் கூத்து (2) மகிடிக் கூத்து (3) நாட்டைக் கூத்து (4) பறை மேளக்கூத்து

**26.** கூத்தினையும் பரதத்தினையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட அரங்க முயற்சியாக அமைவது
(1) கந்தன் கருணை (2) எதிர் கொள்ளக் காத்திருத்தல்
(3) சகுனியர் மூவர் (4) சக்தி பிறக்குது

**27.** கூத்தின் வடிவத்திற்குள் புதிய உள்ளடக்கங்களைப் பயன்படுத்தி 'பாஞ்சாலி சபதம்' எனும் படைப்பினை ஈழத்தில் மேற்கொண்டவர்
(1) இளைய பத்மநாதன் (2) பொன் கணேசமூர்த்தி
(3) காரை சுந்தரம்பிள்ளை (4) திரவியம் இராமச்சந்திரன்

**28.** நாடக ஆற்றுகை ஒன்றினைத் தாக்க வன்மையாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் காண்பிய மூலகங்கள்
(1) ஒலி, ஒளி (2) சொல்லாடல், இசை
(3) காட்சி, ஒலி (4) வேட உடை, ஒப்பனை

**29.** பேராசிரியர் சு. வித்தியானந்தனால் புத்தாக்கம் செய்யப்பட்ட தென்மோடிக் கூத்து
(1) கர்ணன் போர் (2) வாலிவதை (3) நொண்டி நாடகம் (4) இராவணேசன்

**30.** பின்வரும் கூத்துக்களில் 'கோவலன் கூத்து' தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று
(1) முல்லைத்தீவில் ஆடப்படுவது
(2) மாரி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடையது
(3) வஞ்சிப் பத்தன் பாத்திரத்தின் தனித்துவமான ஆட்டம் கொண்டது
(4) கண்ணகி வழக்குரை காவியத்தை அடிப்படையாகக் கொண்டது

**31.** ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள 'ஒலிகளின் கோலம்' என அழைக்கப்படுவது
(1) நடனம் (2) இசை (3) அசைவியக்கம் (4) ஆடற்கோலம்

**32.** நாடக எழுத்துருவுக்கு மேடையில் வியாக்கியானம் தருபவர்களுள் மிகப்பிரதானமானவர்
(1) நாடகாசிரியர் (2) நெறியாளர்
(3) ஒளியமைப்பாளர் (4) நடிகர்

**33.** 'மனிதர்கள் உயிர்க்க வேண்டும்...' எனும் பாடல் வரிகள் இடம்பெற்ற நாடகத்தின் ஆசிரியர்
(1) மு. நித்தியானந்தன் (2) அம்பி (3) இ. முருகையன் (4) சுஹைர் ஹமீத்

**34.** பின்வருவனவற்றுள் வாசிப்பு அரங்கு தொடர்பான **பொருத்தமற்ற** கூற்று
(1) பாத்திரப்பண்பு வெளிப்படத்தக்க வகையில் வாசித்தல்
(2) மெய் நிலைகளுக்கு அதிகளவு முக்கியத்துவமளித்து வாசித்தல்
(3) மெய் நிலைகளுக்கு அழுத்தம் கொடுக்காது குரலைப் பயன்படுத்தி ஏற்ற இறக்கங்களுடன் வாசித்தல்
(4) குரல் வீச்சுக்களைப் பயன்படுத்தி வாசித்தல்

[பக். 4 ஐப் பார்க்க

**35.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - மனிதரும் பொம்மைகளும் இணைந்த அளிக்கைப் பாங்கு
B - ஊர்வலத்துடன் இணைந்து பார்ப்போரும் ஆற்றுவோரும் நகருதல்
C - விவிலியப் பின்னணிக் கதைப் பொருள்
D - பாரதக் கதை நடிக்கப்படுதல்

இவற்றுள் சூரன் போருடன் தொடர்புடைய கூற்றுகள்

(1) A, B (2) B, C (3) B, D (4) C, D

**36.** இலங்கையில் 'லங்கா சுபோத விலாச சபை' ஊடாக தமது அளிக்கைகளை கொண்டு வந்தவர்


(1) கலையரசு சொர்ணலிங்கம்
(2) பேராசிரியர் கணபதிப்பிள்ளை
(3) குழந்தை ம. சண்முகலிங்கம்
(4) காரை சுந்தரம்பிள்ளை

**37.** 'வீரம் வீரம் என்று விரும்பி உரைத்தீர்...' எனும் பாடல் இடம்பெறும் நாடகமும் அதனைப் பாடிய பாத்திரமும் கொண்ட தொகுதி

(1) பாஞ்சாலி சபதம் - பாஞ்சாலி
(2) சத்தியவான் சாவித்திரி - சாவித்திரி
(3) சகுந்தலம் - சகுந்தலை
(4) இராவணேசன் - மண்டோதரி


**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்

(1) நா. சுந்தரலிங்கம்
(2) க. பாலேந்திரா
(3) க. சிதம்பரநாதன்
(4) இ. முருகையன்




**39.** படம் குறித்து நிற்கும் சொக்கரி சிங்கள நாட்டார் ஆற்றுகைக்கான அரங்கவெளி

(1) களத்துமேடு
(2) கரலிய
(3) தானயம்பல
(4) மல்மடுவ



**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவி

(1) பறை
(2) தபேலா
(3) முரசு
(4) தவில்



* *

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Web: www.pastpapers.wiki

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2024(2025)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2024(2025)
General Certificate of Education (Ord. Level) Examination, 2024(2025)

නාට්‍ය හා රංග කලාව (දෙමළ) I, II
நாடகமும் அரங்கியலும் (தமிழ்) I, II
Drama and Theatre (Tamil) I, II

## நாடகமும் அரங்கியலும் (தமிழ்) II

※ **முதலாம்** வினாவுக்கும் ஏனையவற்றுள் எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) வாய்மொழியைப் பயன்படுத்தாது உடல் மொழியைப் பயன்படுத்தி (வெளிப்படுத்தி) நடிக்கப்படும் நடிப்பு முறை யாது? (01 புள்ளி)

(ii) பாரம்பரியக் கூத்துக்களில் கூத்துக்களைப் பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்? (01 புள்ளி)

(iii) காமன் கூத்து பிரதானமாக ஆடப்படும் பிரதேசம் யாது? (01 புள்ளி)

(iv) 'பஞ்ச வர்ண நரியார்' எனும் சிறுவர் நாடகத்தை எழுதியவர் யார்? (01 புள்ளி)

(v) அரங்க ஒளியூட்டலில் மேடை முழுவதும் பரவிச் செல்லும் ஒளிவகை யாது? (01 புள்ளி)

(vi) 'சொக்கரி' நாடகம் ஆற்றுகை செய்யப்படுவதன் நோக்கம் யாது? (01 புள்ளி)

(vii) பாத்திரம் ஒன்றின் சமூகக் குணாம்சங்களில் **ஒன்றைக்** குறிப்பிடுக. (01 புள்ளி)

(viii) அரங்க வெளிகளுள் அரைவட்ட அரங்கிற்கு உதாரணம் **ஒன்று** தருக. (01 புள்ளி)

(ix) நடிகர் ஒருவரைத் தெரிவு செய்யும் போது நெறியாளர் கையாளும் **இரு** தெரிவு முறைகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(x) இசை நாடக நடிகர் செல்வம் (செல்வரத்தினம்) அவர்களால் நடிக்கப்பட்ட பெண் பாத்திரங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

**2.** (i) ஆற்றுகைக் கலை என்ற வகையில் நாடகத்தின் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) கீழ்க்குறிப்பிடப்படும் கலைகள் பற்றிய தனித்துவமான இயல்புகள் **இவ்விரண்டு** தருக.

(அ) இசைக்கலை

(ஆ) இலக்கியக்கலை

(இ) வானொலி நாடகம்

(ஈ) தொலைக்காட்சி நாடகம்

(08 புள்ளிகள்)

**3.** பின்வரும் கூத்துக்கள் பற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(i) வசந்தன் கூத்து

(ii) காமன் கூத்து

(iii) கோவலன் கூத்து

(iv) காத்தவராயன் கூத்து

(04 × 3 = 12 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!

4. 'நடிகர் ஒருவரின் நடிப்புக் கலையில் உடல், குரல், உளம் என்பவற்றின் ஒருமைப்பாடு மிக முக்கியமானதாகும்.'

(i) உடற்பயிற்சி என்பதில் உடலிற்கான பயிற்சிகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன? (04 புள்ளிகள்)

(ii) சுவாசப் பயிற்சி, குரற் பயிற்சி என்பன பற்றி விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) புலனுணர்வுப் பயிற்சிகளின் முக்கியத்துவம் யாவை? விளக்குக. (04 புள்ளிகள்)

5. பின்வரும் நாடகம் சார் சமயச் சடங்குகளின் ஆற்றுகை முறைமைகளை விளக்குக.

(i) சூரன் போர் (04 புள்ளிகள்)

(ii) ரட்டயக்கும (04 புள்ளிகள்)

(iii) பறை மேளக்கூத்து (04 புள்ளிகள்)

6. (i) 'புதியதொரு வீடு' நாடகத்தின் பிரதான 'கரு' எதுவெனக் குறிப்பிட்டு அந்நாடகத்தில் வரும் **இரண்டு** பெண் பாத்திரங்களையும் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(ii) 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் இடம்பெறும் அம்பிகை, ஆரணி ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் குறிப்பிட்ட பாத்திரங்களில் குண இயல்பிற்கு ஏற்றவாறு அப்பாத்திரங்களிற்குரிய வேட உடை, ஒப்பனை என்பவற்றை எவ்வாறு திட்டமிடுவீர் என்பதை விவரிக்குக. (04 புள்ளிகள்)

7. பின்வரும் அரங்கவியலாளர்கள் ஈழத்தமிழ் அரங்கிற்கு ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.

(i) கலையரசு சொர்ணலிங்கம்

(ii) க. கணபதிப்பிள்ளை

(iii) நா. சுந்தரலிங்கம்

($03 \times 4 = 12$ புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded from 'Past Papers Wiki' - Most Extensive Wikipedia of Past Papers!